2010 ஏப்ரல் 7]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு அமைச்சர் சொன்ன ** என்ற வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *அதை நீக்கிக்கொள்ளுங்கள். (குறுக்கீடு) அவருக்கு வாய்ப்பைக் கொடுங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொல்லட்டும்.*

3. உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார் 5–4–2010 அன்று தெரிவித்த ஆதாரமற்ற குற்றச்சாட்டு குறித்து தீர்ப்பினை வழங்க பேரவைத் தலைவருக்கு வேண்டுகோள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு முதல்வர். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதல்வர்.*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு கோயிலில் திருப்பணியே நடைபெறவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குற்றஞ்சாட்டி அந்தக் குற்றத்தை மறுத்து நம்முடைய அமைச்சர் அவர்கள் (குறுக்கீடுகள்) இந்த அவையிலே விளக்கம் அளித்து, தன்னோடு நேரில் வந்தால் திருப்பணி நடைபெறுவதைக் காட்டத் தயார் என்று குறிப்பிட்டும்கூட, அதை ஏற்றுக்கொள்ளாமல், தவறுகளை ஏற்றுக்கொள்கின்ற மனப்பான்மை பெறாமலோ என்னவோ, ஒரு பெரிய ரகளை அன்றைக்கு இங்கே நடத்தப்பட்டது. அதன் பின் அமைச்சர் அவர்கள் நேரிலேயே அந்த இடத்திற்குச் சென்று அங்கே கோயில் திருப்பணி நடைபெறுவதைப் புகைப்படம் எடுத்து அதைக்கொண்டு வந்து தங்களிடத்திலே காட்டியிருக்கிறார். இந்த அவைக்கும் அதைக் காட்டி தான் சொன்னது சரிதான், மாண்புமிகு அ.தி.மு.க. உறுப்பினர் இந்த அவையிலே சொன்னதுதான் தவறான செய்தி என்று குறிப்பிட்டிருக்கிறார்.*

இதிலே ஆராய வேண்டியது, அ.தி.மு.க. உறுப்பினர் அவர்கள் தெரியாமல் இந்தச் செய்தியைச் சொன்னாரா அல்லது வேண்டுமென்றே இதைச் சொன்னாரா என்பதுதான். தெரியாமல்தான் சொன்னேன் என்று குறிப்பிடுவாரேயானால் இந்தப் பிரச்சினையை அமைச்சருடைய விளக்கத்தோடு

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

விட்டுவிடலாம். நான் வேண்டுமென்றுதான் சொன்னேன் என்று சொல்வாரேயானால், தாங்களும் அப்படிக் கருதுவீர்களேயானால், அதற்குரிய தீர்ப்பை தாங்கள்தான் வழங்க வேண்டும். ஏனென்றால், எதிர்காலத்திலே எந்த ஆதாரமும் இல்லாமல் குற்றச்சாட்டுகளைக் கூறி, பிறகு அவற்றை நிரூபிப்பதற்குத் தயாரா என்று கேட்கிற நேரத்தில், ஒதுங்கிக்கொள்வது, பின்வாங்கிக்கொள்வது, இந்த அவையினுடைய கண்ணியத்திற்கு, மரபுக்கு நல்லதல்ல என்பதால் எல்லா உறுப்பினர்களும், திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த உறுப்பினர்களுக்கும் சொல்கிறேன், இங்கே ஆதாரங்கள் இல்லாமல், வேண்டுமென்றே யார் மீதும் குற்றஞ்சாட்டாமல் இருக்க வேண்டும் என்பதற்காக இந்த வேண்டுகோளைத் தங்களிடம் நான் வைக்கின்றேன்.

முற்பகல் 10–50

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இதுகுறித்த என்னுடைய முடிவை நாளைக்குத் தெரிவிக்கிறேன். எல்லோரும் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) இதுகுறித்த என்னுடைய முடிவை நாளைக்குத் தெரிவிக்கிறேன். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். (குறுக்கீடுகள்) எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். திரு. செ.ம. வேலுசாமி, ரொம்ப துள்ளாதீர்கள். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் எல்லோரும் அங்கிருந்துகொண்டு அளவுக்கு அதிகமாக சத்தம் போட்டுக் கொண்டிருக்கிறீர்கள். அது முறையல்ல. உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அவர் சொன்ன அந்த வார்த்தை அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்பட்டுவிட்டது. (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள்.

கோயம்புத்தூர் அம்மன்குளம் பகுதியில் ஜவஹர்லால் நேரு தேசிய புனரமைப்புத் திட்டத்தின்கீழ்... (குறுக்கீடு) மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

HON'BLE THIRU DURAIMURUGAN: My humble submission is, this is a clear case. Under Rule 26 of the Assembly Rules, the Speaker has got right. He can suo motu refer the matter to the Privileges Committee.

HON'BLE SPEAKER: I will give my response tomorrow.